Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 161/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW3** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | விஜி பிரபாகரன் |
| Father/Husband Name | : | முனியசாமி |
| Village | : | சேராங்கோட்டை, இராமேஸ்வரம் |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | கடல்தொழில் |
| Religion | : | |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025.

(. 7ம் எதிரி ஆஜர் இல்லை, எதிரிகள் தரப்பில் BNSS–355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமேஸ்வரம் சேராங்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். கடல்தொழில் செய்து வருகிறேன். அ.சா.1,2 சாட்சிகளான சேதுபதி, சத்திரியன் மற்றும் சாட்சி சூர்யபிரகாஷ் ஆகியோர்களை தெரியும். இறந்துபோன நம்புகுமாரை தெரியும். ஆஜர் எதிரிகளையும், நீதிமன்றத்திற்கு வராத 7ம் எதிரி சதீஷ்குமாரையும் தெரியும். நம்புகுமார் இறந்துபோவதற்கு 4,5 மாதங்களுக்கு முன்பு தெற்கு கரையூர் மந்தை மாரியம்மன் கோவிலில் திருவிழா நடந்தது. அப்போது நான், சேதுபதி, சத்திரியன்,

இறந்த நம்புகுமார் ஆகிய நால்வரும் நடந்து சென்றபோது எங்கள் ஊருக்குள் ஏன் வந்தீர்கள் என்று சொர்கேஷ்வரன், அயன் சரண்குமார், ரஞ்சித் ஆகிய மூவரும் எங்கள் ஏரியாவுக்குள் வரக்கூடாது என்று சண்டை போட்டார்கள். அது சம்பந்தமாக நாங்கள் எங்கள் ஊரில் சொல்லி இரு ஊர்களுக்கும் பஞ்சாயத்து நடைபெற்று எதிரிகளை எதிரிகளின் ஊர்க்காரர்கள் எச்சரிக்கை செய்தார்கள். அந்த பகையை மனதில் வைத்துக்கொண்டு கடந்த 14.01.2025ம் தேதி இரவு 8.00மணியளவில் எங்கள் ஊருக்கும் எதிரிகளின் ஊருக்கும் நடுவே உள்ள பூமாரியம்மன் கோவில் அருகில் நான், சத்திரியன், சேதுபதி, சூர்யபிரகாஷ், நம்புகுமார் ஆகியோர்கள் நின்றுகொண்டிருக்கும்போது ஒரு பைக்கில் ஜீவித், சொர்கேஷ்வரன், அயன் சரண்குமார் ஆகிய மூவரும் வந்து நீங்கதானடா எங்கள் ஊரில் சொல்லி எங்களை அசிங்கப்படுத்தியது என கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள். அப்போது 1ம் எதிரி சொர்கேஷ்வரன் கத்தியை எடுத்து நம்புகுமாரின் பின்னந்தலையில் குத்திவிட்டான். அயன்சரண்குமார் கத்தியால் நம்புகுமாரின் வலது தோள்பட்டையில் குத்திவிட்டார். ரஞ்சித் கத்தியால் நம்புகுமாரின் இடது தோள்பட்டையில் குத்திவிட்டான். மற்ற எதிரிகள் அனைவரும் நம்புகுமாரை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். தடுக்க போன என்னை நம்புசரண் கத்தியால் வலது முதுகில் குத்திவிட்டான். சத்திரியனையும் அஷ்வீன் கத்தியால் தோள்பட்டையில் குத்திவிட்டான். சேதுபதியையும் நம்புசரண் கத்தியால் குத்திவிட்டான். நாங்கள் அலறும் சத்தம் கேட்டு எதிரிகள் ஓடிவிட்டார்கள். நம்புகுமாருக்கு இரத்தம் அதிகமாக வழிந்துகொண்டிருந்ததால் அந்த வழியாக வந்த ஆட்டோவில் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு நான் சேதுபதி, சத்திரியன், சூர்யபிரகாஷ் ஆகியோர்கள் கொண்டுபோய் சேர்த்தோம். அங்கு சென்ற 10 நிமிடங்கள் கழித்து நம்புகுமார் இறந்துவிட்டதாக மருத்துவர் சொன்னார். எங்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு நான், சத்திரியன், சேதுபதி, சூர்யபிரகாஷ் ஆகிய நால்வரும் சேர்ந்தோம். அன்று இரவு 2.00 மணியளவில் இராமேஸ்வரம் ஜெட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து எங்களை விசாரித்தார். சேதுபதியிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றார். TN 65 BC 0262 என்ற Splendor Plus பைக்கில் ஜீவித் ஓட்ட சொர்கேஷ்வரனும், அயன்சரணும் பின்னால் உட்கார்ந்து வந்தார்கள். எதிரிகள் எங்களை தாக்கிய ஆயுதங்களை காட்ட

முடியுமா என்றால் முடியும் . நீதிமன்றத்தில் உள்ள கத்திகளால்தான் எதிரிகள் எங்களை குத்தினார்கள். நான் இராமேஸ்வரம் நீதித்துறை நடுவர் முன்பு எனது வாக்குமூலத்தை அளித்தேன். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

எதிரிகளின் வழக்கறிஞர் சம்பவ சாட்சிகள் அனைவரையும் ஒரே நாளில் குறுக்கு விசாரணை செய்ய கேட்டுக்கொண்டதால் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.